**This Question Paper consists of 31 questions and 8 printed pages.**
**8 பக்கங்களைக் கொண்ட இவ்வினாத்தாளில் 31 வினாக்கள் உள்ளன.**

**Roll No.** | | | | | | | | | | | | **Code No. 53/S/O/TM**

# TAMIL
# (தமிழ்)
# (237)

தேர்வு நடைபெறும் நாள் மற்றும் தேதி : ______________________

தேர்வு மேற்பார்வையாளர் கையொப்பம் : **1.** ______________________

**2.** ______________________

---

**I. பொதுக்குறிப்புகள் :**

**1.** தேர்வு எழுதுவோர் தங்களின் வரிசை எண்ணை வினாத்தாளின் முன்பக்கம் எழுத வேண்டும்.

**2.** வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் வினாத் தாளின் முன்பக்கம் அச்சாகியுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் மொத்த பக்கங்களின் எண்ணிக்கையும் சரியாக உள்ளனவா என்பதையும் அனைத்து வினாக்களும் வரிசையாக உள்ளனவா என்பதையும் சரிபார்க்கவும்.

**3.** பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து விடையளிக்கும் போது கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் (A, B, C, D) ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுத வேண்டும்.

**4.** பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதும் வினாக்கள் உட்பட அனைத்து வினாக்களும் குறிப்பிட்ட நேரத்திற்குள் எழுதி முடிக்கப்பட வேண்டும். பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதும் வினாக்களுக்காகத் தனியாக நேரம் எதுவும் கொடுக்கப்படமாட்டாது.

**5.** வினாத்தாளில் ஏதேனும் அடையாளக் குறிகள் இட்டாலோ அல்லது தேர்வு எழுதுபவர் தனது எண்ணை அதற்கென ஒதுக்கப்படாத இடத்தில் எழுதினாலோ தேர்வு எழுதுபவர் தேர்வு எழுதும் தகுதியை இழக்க நேரிடும்.

**6.** உங்களது வினாத்தாளின் **Code** எண் **53/S/O/TM-A** விடைத்தாளில் எழுதுங்கள்.

**பொதுக்குறிப்பு**கள் :

பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து விடையளிக்கும் போது கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் (A, B, C, D) ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுத வேண்டும்.

# TAMIL
# (தமிழ்)
# (237)

கால அளவு : **3** மணி நேரம் ] [ மொ. மதிப்பெண் : **100**

---

**குறிப்பு :** **(1)** அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

**(2)** வினாக்களை நன்கு புரிந்து கொண்டு விடையளிக்க.

**(3)** விடைகளுக்குரிய சரியான வினா எண்களை எழுதவும்.

---

பொருத்தமான விடையை எடுத்து எழுதுக. **1×11=11**

**1** இயற்கை வளம் ஓங்குவதால் மக்கள் ............. செழிக்கும்.

(A) கல்வி

(B) நலம்

(C) செல்வம்

(D) பண்பாடு

**2** பெண் வன்முறையை எதைப்போல் சகஜமாக்கிக் கொள்கிறாள்

(A) சுவாசிப்பதைப் போல்

(B) உறங்குவதைப் போல்

(C) உண்பதைப் போல்

(D) சமைப்பதைப் போல்

**3** முதற் சங்கத்தில் தலைவராய் வீற்றிருந்தவர்

(A) தருமி

(B) இறையனார்

(C) அகத்தியன்

(D) நக்கீரனார்

4 முறை என்ற சொல் உணர்த்தும் பொருள்

(A) உறவு முறை

(B) சட்டம்

(C) விதி

(D) மனம்

5 காந்திக்கு பிரிவு உபசார விருந்து நடைபெற்ற இடம்

(A) கவர்னர் மாளிகை

(B) சைடன் ஹாம்

(C) பிரசிடெண்ட் தெருவிலுள்ள மைதானம்

(D) காந்தியின் இருப்பிடம்

6 கயையிலிருந்து இலங்கைக்கு எடுத்துச் செல்லப்பட்டது

(A) புத்தர் திருவுருவம்

(B) போதி மரத்தின் கிளை

(C) ஏசு நாதர் உருவம்

(D) போதி மரத்தின் இலை

7 மடத்தைக்குறிக்கும் வேறு பெயர்

(A) விகாரம்

(B) ஆலயம்

(C) பள்ளி வாசல்

(D) ஆசிரமம்

8 சுந்தரர் கனவில் இறைவன் ............... உருவில் வந்தார்.

(A) பசு

(B) எருமை

(C) காளை

(D) ஆடு

9 சட்டத்தில் பாசி மணிகள் இணைக்கப்பட்ட அமைப்பு

(A) நேப்பியர் ராடுகள்

(B) கணிப்பான்

(C) அபாகஸ்

(D) எனியாக்

10 கொடைக்கானலின் சிறப்புப் பெயர்

(A) வேனல் மலை

(B) மலைகளின் அரசி

(C) குறிஞ்சி மலை

(D) மலைகளின் இளவரசி

11 முன்னிலை பன்மை

(A) நான்

(B) நாங்கள்

(C) நீங்கள்

(D) அவர்கள்

12 கீழ்க்காணும் பத்தியைப்படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளி.

ஆங்கில நாட்டில் ஒரு காலத்தில் இலத்தீன் மொழி அரசோச்சியது. அதனைப் பள்ளிக்கூடத் தலைமையாசிரியர் ஒருவர் விரும்பவில்லை. அவர் தம் மொழிப்பற்றை பின் வருமாறு வெளிப்படுத்தியுள்ளார்; "கல்வியின் பொருட்டு ஒரு மொழிக்கு அடிமையாவது அடிமைத் தன்மைகளுள் பெரிய அடிமைத் தன்மையாகும். பிற மொழிகளைக் கற்பதனால் மிகுந்த நேரத்தை இழக்கின்றோம். பிற மொழியால் பெறும் அதே செல்வத்தை நம் மொழியில் குறைந்த காலத்தில் பெறலாம். நம் மொழி நம் உரிமையையும் விடுதலையையும் வெளிப்படுத்துகிறது. இலத்தீன் மொழி நம் அடிமைத்தனத்தையும் இழிவையும் வெளிப்படுத்துகிறது. உரோம் நகரை விரும்புகின்றேன்; ஆனால் இலண்டன் நகரை அதனினும் மிகுதியாக விரும்புகின்றேன். இத்தாலியைப் போற்றுகின்றேன். ஆனால் ஆங்கிலத்தை நான் தொழுகின்றேன்."

**<u>வினாக்கள் :</u>**

(1) இலத்தின் மொழியைப் பயன்படுத்துவது எதனை வெளிப்படுத்துகிறது என்கிறார் ? **3**

(2) தனது தாய் மொழியைப் பயன்படுத்துவது எதனை வெளிப்படுத்துகின்றது என்கிறார் ? **3**

(3) எந்த நாட்டைப் போற்றுகின்றேன் என்கிறார் ? **1**

(4) எந்த நாட்டை விரும்புகின்றேன் என்கிறார் ? **1**

(5) ஒரு காலத்தில் ஆங்கில நாட்டில் அரசோச்சிய மொழி யாது ? **1**

(6) பிற மொழியைக் கற்பது குறித்து ஆசிரியர் கூறும் மூன்று கருத்துகளை எழுதுக ? **3**

13 பாடல் வரிகளைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

இளங்கதிர் கிழக்கில் இன்னும் எழவில்லை
இரவு போர்த்த இருள்நீங்க வில்லை
ஆயினும் கேள்வியால் அகலும் மடமைபோல்
நள்ளிரவு மெதுவாய் நகர்ந்து கொண்டிருந்தது
தொட்டி நீலத்தில் சுண்ணாம்பு கலந்த
கலப்பென இருள் தன் கட்டுக் குலைந்தது
புலந்திடப் போகும் பொழுது, கட்டிலில்
மலர்ந்தன அந்த மங்கையின் விழிகள்

**வினாக்கள் :**

(1) இளங்கதிர் எத்திசையில் எழவில்லை ? 1

(2) இருள் தன் கட்டினை எவ்வாறு குலைத்ததெனக் கவிஞர் கூறுகிறார் ? 2

(3) இப்பாடலில் அமைந்துள்ள உவமையை எழுதுக. 2

(4) கேள்வியால் அகலுவது எது ? 1

14 செந்தமிழ் நாட்டின் நதிகள் இரண்டினை எழுதுக ? 1

15 அறிவு நிறைந்தவர் எவ்வாறு இருப்பர் ? 1

16 அஞ்சம்மா எதனை கழற்றி எறிந்தாள் ? 1

17 வெட்டி விடப்படும் குரோட்டன்ஸ் யார் ? 1

18 தமிழில் மொழி பெயர்க்க. 1

(அ) Certificate

(ஆ) Intial

19 (அ) சேர்த்து எழுதுக. $4 \times \frac{1}{2} = 2$

(i) துகள் + தீர்

(ii) என் + ஆனும்

(iii) தொடுத்து + ஆறு

(iv) கை + உற

(ஆ) கீழ்க்காணும் விகுதிகளைக் கொண்டு ஒவ்வொன்றுக்கும் இரண்டு இரண்டு சொற்களை எழுதுக. 2

(1) தல்

(2) கை

(இ) கீழ்க்கண்ட தொடர்களில் விடுபட்ட இடத்தை எதிர்மறைச் சொற்களைக் கொண்டு நிரப்புக. 2

(1) நிழலின் அருமை ............... தெரியும்.

(2) இளமையில் உழைப்பவர் ............... இன்புறுவர்.

(ஈ) கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்கு அதே பொருள் தரும் வேறு சொற்களை எழுதுக. $\frac{1}{2} \times 4 = 2$

(1) முடுகும்

(2) விஞ்சை

(3) கரந்தது

(4) நிருதர்

**20** பின்வரும் மரபுத் தொடர்களைப் பயன்படுத்தி வாக்கியம் அமைக்க. 2

(1) ஆழம் பார்த்தல்

(2) கதை கட்டுதல்

**21** சுய உதவிக்குழு என்பதன் பொருளைக் கூறுக. 1

**22** சாலைகள் பழுதடைந்திருப்பதன் காரணமாகப் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவது குறித்து ஒரு பத்தியில் குறிப்பு எழுதுக. 4

**23** தசரதனின் தயக்கம் விசுவாமித்திரரின் கோபம் ஆகியவை குறித்து எழுதுக. 5

**24** பொது இடங்களில் புகைபிடித்தல் கூடாது என்பது குறித்த அறிவிப்பினை எழுதுக. 5

**(அல்லது)**

நூலகத் திறப்பு விழா நடைபெறப் போவது குறித்த விளம்பர அறிவிப்பினை எழுதுக.

**25** (அ) வழி - வளி இவற்றுக்கான பொருள் வேறுபாடு கூறி வாக்கியத்தில் அமைத்து எழுதுக. 2

(ஆ) கர்ச்சித்தல்-ஊளையிடுதல் இவை எவ்விலங்குகளுக்குரிய ஒலிகளாகும் ? 2

**26** அறிவியல் கண்காட்சி பற்றி உனது பள்ளி தகவல் பலகையில் இடம்பெற வேண்டிய தகவல்கள் குறித்து ஓர் அட்டவணை தயாரிக்க. **5**

**(அல்லது)**

32, முனீஸ்வரன் தெரு, சங்கரன் கோவிலில் இருக்கும் நீ சென்னையில் 22, வடக்கு ரத வீதியில் வசிக்கும் உன் தந்தைக்கு ஆயிரம் ரூபாய் அனுப்புவதாகக் கொண்டு கீழே தரப்பட்டுள்ள பண அஞ்சல் படிவத்தைப் பூர்த்தி செய்க. (உமது பெயர் கண்ணன் / கண்ணகி என்று கொள்க. தந்தையின் பெயர் ராமு எனக் கொள்க)

**இந்திய பண அஞ்சல் படிவம்**

தகவலுக்கான இடம்

1. ..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

| | |
|---|---|
| பண அஞ்சல் எண் : 7 | பெறுநர் : |
| 2. ................................................ | 3. ................................................ |
| .................................................... | .................................................... |
| ............................... வழங்கவும். | .................................................... |

அனுப்புநர்

கையொப்பம் ......................................

........................ இக்கோட்டிற்குக் கீழ் எழுதுதல் கூடாது ..........................................

................................ இரண்டாவது மடிப்பு ...............................................................

..............................................................................................................

4. பெற்றுக் கொண்டேன் ....................................................................

....................................................................

பெற்றுக் கொண்டவர் கையொப்பம் ........................................................

..............................................................................................................

5. அனுப்புபவர் பெயர் மற்றும் முகவரி : ...........................................................

...........................................................

...........................................................

27 வெள்ளைச்சாமி அஞ்சலம்மாவின் அன்பை விவரிக்க ? 5

**(அல்லது)**

காந்தியடிகள் கொள்கையை உணராத மக்கள் நிலையை மு.வ. எவ்வாறு விவரிக்கின்றார் ?

28 பிழை திருத்தம் செய்க : 5

(1) வலி மேல் விளி வைத்தால்.

(2) கதிறவன் கிலக்கிள் எழுவான்.

(3) உரை மேல் முகவறி எழுது.

(4) சவுரை மேய்ந்தான்.

(5) முக்கணிகளின் சுவைதான் எண்ணே !

29 உன்னுடைய பள்ளி மாணவருடன் நீ சென்று வந்த சுற்றுலாவைப்பற்றி உன் நண்பனுக்குச் சுவையான கடிதம் ஒன்று எழுதுக. 7

**(அல்லது)**

நீவிர் வாழும் பகுதியில் மின்சாரக் கம்பிகள் அறுந்து விழுந்துள்ளதால் அதை அப்புறப் படுத்தக் கோரி மினவாரிய அதிகாரிக்கு முறையாட்டுக் கடிதம் எழுதுக.

30 ஏதேனும் ஒரு தலைப்பு பற்றி நூறு சொற்களுக்குக் குறையாமல் சிறு கட்டுரை எழுதுக. 5

(1) அனைவருக்கும் கல்வி.

(2) மாணவர் கடமை.

(3) விளையாட்டின் இன்றயமையாமை.

31 ஏதேனும் ஒரு தலைப்பு குறித்து இருநூறு சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக. 10

(1) மாணவரும் சமூக நலத் தொண்டும்.

(2) செய்தித்தாளின் பயன்கள்.

(3) சுற்றுச் சூழல் பாதுகாப்பு.